உயிரியல்

உரிய இழையத்தினூடாக கொண்டு செல்லப்படும் பதார்த்தங்கள்



e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி : 4.20 கலன்தாவரங்களில் வளங்களின் பெறுகை மற்றும் அவற்றின் கொண்டு செல்லலை பரி-சோதிப்பர்

தேர்ச்சி மட்டம் : 4.24 தாவரங்களில் பதார்த்தத்தைக் கொண்டு செல்லுகையில் பங்கு பற்றும் செயன்முறைகளை நுணுகியாய்வர்

பாடவேளைகள் : 05

உரிய இழையத்தினூடாக கொண்டு செல்லப்படும் பதார்த்தங்கள்

நெய்யரிக்குழாயினூடு பாயும் நீர்க்கரைசல் **உரியச்சாறு** எனப்படும்



உரிய கொண்டுசெல்லல் பொறிமுறை மற்றும் அதன் அடிப்படை இயல்புகள்

- உரியக் கொண்டு செல்லல் : இருதிசைக்குரியது.
- உரியக் கொண்டு செல்லல் : ஆரம்பிக்குமிடம் வெல்லமூலம் (Sugar Source)
  கொண்டு செல்லல் முடியுமிடம் : வெல்ல தாழி (Sugar sink)
- கொண்டு செல்லல் அளவு உயர்வானது
- நாளின் நேரத்தினூடு வேறுபடும்.
- வெல்ல மூலம் : 1) தாவரத்தின் நன்கு ஒளித்தொகுப்பு செய்யும் இலைகள்
  2) பருவகாலங்களில் - சேமிப்பு இழையங்கள்

தொகுப்பு : திரு. அ.தயாபரன், (ஆசிரியர் - உயிரியல், யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உரியக் கொண்டு செல்லலின் பொறிமுறை



- தாழிகள் அருகில் உள்ள வெல்ல மூலத்தில் இருந்து வெல்லங்களைப் பெற்றுக் கொள்ளும்.
- வெல்ல மூலங்கள், வெல்ல தாழிகளின் அமைவிடத்தை பொறுத்து, கொண்டு செல்லல்திசை ஆரம்பிக்கும்.
- உற்பத்தியாகுமிடம், முடிவடையுமிடம் வேறு வேறாக இருப்பின் அருகருகே உள்ள நெய்யரிக் குழாய்களில் கொண்டு செல்லலின் திசை வேறுபடும்.
- கொண்டு செல்லலின் முதற்படி வெல்லம் நெய்யரிக்குழாய் மூலகங்களினுள் கொண்டு செல்லப்படுதலாகும். இது சுமையேற்றப்படலாகும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு. அ.தயாபரன், (ஆசிரியர் - உயிரியல், யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- சில இனங்களில் இலைநடுவிழையக் கலங்களில் இருந்து நெய்யரிக்குழாய் மூலகங்களிற்கு Symplast மூலம் முதலுரு இணைப்பு மூலம் கொண்டு செல்லப்படும்.

- அநேக இனங்களில் கொண்டு செல்லல் உயிர்ப்பானது இவற்றில் Sucrose அதிக செறிவில் நெய்யரிக்குழாய் மூலகங்களிலும், தோழமைக்கலத்திலும் இலைநடுவிழையத்தைக் காட்டிலும் காணப்படுவதாலாகும்.

- Sucrose ஆனது நெய்யரிக்குழாயின் முடிவில் உள்ள வெல்ல தாழிகளில் சுமை இறக்கப்படுகின்றது.

- வெல்ல தாழிகளில் சுயாதீன வெல்லத்தின் செறிவு நெய்யரிக்குழாய்களில் உள்ளதை விடஎப்போதும் குறைவாக இருப்பதால் உயிர்ப்பற்ற முறையில் வெல்ல தாழியினுள் பரவலடைகிறது. நெய்யரிக்குழாயில் கரைய அழுத்தம் குறைய நீர்ப் பிரசாரண மூலம் பரவலடைகிறது.



- பூக்கும் தாவரங்களின் நெய்யரிக்குழாயின் அமைப்பை காழ்க்கலனிலிருந்து வேறுபடுத்துக.
- உரியத்தினூடு கொண்டு செல்லல் ஆனது காழில் கொண்டு செல்லலில் இருந்து வேறுபடுத்துக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திரு. அ.தயாபரன், (ஆசிரியர் - உயிரியல், யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk